# லைலதுல் ஃகத்ரு

إِنَّآ أَنزَلۡنَٰهُ فِي لَيۡلَةِ ٱلۡقَدۡرِ ١ وَمَآ أَدۡرَىٰكَ مَا لَيۡلَةُ ٱلۡقَدۡرِ ٢ لَيۡلَةُ ٱلۡقَدۡرِ خَيۡرٞ مِّنۡ أَلۡفِ شَهۡرٖ ٣ تَنَزَّلُ
ٱلۡمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا بِإِذۡنِ رَبِّهِم مِّن كُلِّ أَمۡرٖ ٤ سَلَٰمٌ هِيَ حَتَّىٰ مَطۡلَعِ ٱلۡفَجۡرِ ٥ ( القدر . ٥ )

*பொருள்: நிச்சயமாக, நாம் இதனை (திருக்ஃகுர்ஆனை) மாட்சிமை மிக்க இரவில் இறக்கி வைத்தோம். மாட்சிமை மிக்க இரவு என்னவென்று உமக்குத் தெரியுமா? மாட்சிமை மிக்க இரவு ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்ததாகும். அதில் வானவர்களும் ரூஹுவும் தன் இறைவனின் அனுமதி யுடன் அனைத்துக் கட்டளைகளையும் ஏந்திய வண்ணம் இறங்குகின்றார்கள். அந்த இரவு முழுவதும் நலம் பொருந்தியதாகத் திகழ்கின்றது, வைகறை உதயமாகும் வரையிலும். (அல் ஃகத்ரு:1-5).*

இது மிகவும் சிறப்புமிக்கப் புனிதமான இரவாகும், இந்த இரவில் இறை வணக்கத்தில் ஈடுபடுவது மிகவும் சிறந்ததாகும். இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகின்றார்கள்:

**مَنْ قَامَ لَيْلَةَ القَدْرِ إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ، وَمَنْ صَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ** ( البخاري )

*பொருள்: லைலதுல் ஃகத்ரு இரவில் ஈமான் கொண்ட எவரும் பிரதிபல னையும் நற்கூலியையும் எதிர்ப்பார்த்து இறைவணக்கத்தில் ஈடுபடுவாரே யானால், அவர்களுடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக் கப்பட்டுவிடுகின்றன.* (புக்ஹாரி). இந்த இரவு ரமஜ்தான் மாதத்தின் கடைசி பத்து நாட்களின் ஒற்றைப்படை இரவுகளில் *(21,23,25,27,29)* ஒரு இரவாகும். ஹஜ்ரத் உபை பின் கஅப் (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நான் அதனை அறிவேன். ஹஜ்ரத் ஷுஅபா (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், லைலதுல் ஃகத்ரு இரவினைப் பற்றிய உண்மை என்னுடைய நினைவுக்கு எட்டிய வகையில் அந்த இர வில்தான் இறைத்தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு இறைவணக்கங்களைப் பற்றிக் கட்டளையிட்டார்கள், அது இருபத்தேழாவது இரவாக இருந்தது (முஸ்லிம்). இது நிர்ணயிக்கப்படாததற்குக் காரணம் மற்றும் அதன் இரக சியம், மனிதன் இதனை அடைவதற்காக அதிகமாகவே வணக்க ஈடுபாடு களின் மூலம் முற்படவேண்டும் மற்றும் அதன் பிரதிபலனை அடைய வேண்டும் என்பதாகும். இந்த இரவில் துஆ கேட்பது பற்றி ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்டார்கள், இறைத்

www.uzairfalahi.com

தூதர் ﷺ அவர்களே, இந்த இரவில் நாங்கள் என்ன துஆ கேட்கவேண்டும், அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், இந்த துஆவைக் கேளுங்கள்:

اللَّهُمَّ إِنَّكَ عُفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّي الترمذي، إبن ماجه )

*பொருள்: அல்லாஹ்வே, நீ மன்னிப்பாவனாக இருக்கின்றாய், மேலும், மன்னித்தருள்வதை நீ மிகவும் விரும்புகின்றாய், என்னையும் மன்னித் தருள்வாயாக* (திர்மிதி, இப்னு மாஜா).

**இஃதிகாஃப்**

இஃதிகாஃப் என்பது அல்லாஹ் தஆலாவுடனான ஒரு முஃமினுடைய மிகவும் நெருங்கிய உறவு, அவனுடைய மன நிம்மதி மற்றும் வாழ்க்கை யின் மேன்மைக்கான ஒரு ஆதாரமாகும். உலக வாழ்க்கையில் எண்ணற்ற விரும்பத்தகாத விஷயங்களை ஒரு மனிதன் எதிர்கொண்டுதான் இருக் கின்றான், இதன் காரணமாக, அவனுடைய கண்ணாடிபோன்ற மனதில் தூசு (மாசு) படிந்துவிடுகின்றது. ஆகவே, அதனை அவ்வப்போது அகற்றி சுத்தப்படுத்தவேண்டியிருக்கின்றது, அவனுடைய மனது தூய்மைப்படுத்தப் படவேண்டியுள்ளது. இதற்கான மிகச் சிறந்த வழி அல்லாஹ்வை மிக அதிகமாகவே தியானிப்பது மற்றும் அவனுடைய வணக்கத்தில் மிக அதிக மாகவே ஈடுபாடுகொண்டிருப்பதாகும். இதன் காரணமாக, இறைவ னுடனான கூடுதாலான நெருக்கத்தைப் பெற முயற்சிக்கவேண்டும் மற்றும் இறைவனுக்காகவே தன்னை அர்ப்பணித்துவிடவேண்டும். இவையனைத் தும் இஃதிகாஃப் மூலம் மிகச் சிறந்த முறையில் அடையமுடியும்.

www.tzaifadhi.com

**இஃதிகாஃப் என்பதன் பொருள்**

இஃதிகாஃப் என்பது அல்லாஹ்வுடனான கூடுதாலான நெருக்கத்தைப் பெறும் எண்ணத்துடன் (நிய்யத்) பள்ளிவாசலில் தங்கியிருந்து அதிகமாக வும் முழு முனைப்புடனும் இபாதத்(வணக்கத்)தில் ஈடுபடுவதாகும்.

**இஃதிகாஃபின் விதங்கள்**

1 **வாஜிபான இஃதிகாஃப்** இது நேர்ச்சையின் காரணமாக இஃதிகாஃப் என்ற வகையில் இதனை நிறைவேற்றுவது கட்டாயமானதாக ஆகி விடுகிறது. ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்டார்கள், இறைத்தூதர் ﷺ அவர் களே, நான் கஅபாவில் இஃதிகாஃப் செய்வதாக நேர்ச்சை செய்திருந் தேன், அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அதனைக்

கட்டாயம் நிறைவேற்றுங்கள் (புக்ஹாரி, முஸ்லிம்). ஒருவர் இஃதிகாஃப் செய்வதாக நேர்ச்சை செய்திருந்து அதனை நிறைவேற்ற முடியாமல் இறந்தவிடுவாரேயானால், அதன் காரணமாக, அவருக்கு எந்த பாதிப்பும் இருக்காது.

2 **முஸ்தஹப்பான இஃதிகாஃப்** இது குறிப்பாக ரமஜ்தான் மாதத்தின் கடைசி பத்து நாட்களின் இஃதிகாஃப் ஆகும். இதற்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு:

1 **இஃதிகாஃப் செய்பவர் முஸ்லிமாக இருக்கவேண்டும்**

2 **அறிவாற்றல் மிக்கவராக இருக்கவேண்டும், மனநிலை குன்றியவராக இருக்கக்கூடாது.** வயது வராத, அறிவாற்றல்மிக்க சிறுவனும்கூட இஃதிகாஃப் மேற்கொள்ளலாம்.

3 **இஃதிகாஃப் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்படவேண்டும்** வீடுகள் அல்லது வேறு இடங்களில் செய்யக்கூடாது. இருப்பினும், பெண்கள் மட்டும் அவர்கள் தொழுகை நிறைவேற்றுமிடத்தில் இஃதிகாஃப் மேற்கொள்ளலாம்.

4 **நிய்யத் செய்வது இன்றியமையாததாகும்**

5 **கடமையான குளிப்பு, மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேறுகால இரத்தப் போக்கிலிருந்து தூய்மையடைந்திருப்பது கட்டாயமானதாகும்.**

இஃதிகாஃப் செய்பவர் அல்லாஹ்வுடைய திக்ரு (தியானம்), ஸலவாத் மற்றும் தொழுகை ஆகிய வணக்கங்களை மிக அதிகமாகவே செய்ய வேண்டும். திருக்ஃகுர்ஆன் ஓதுவது, நஃபிலான தொழுகை மற்றும் நோன்பு ஆகியவையும் மேற்கொள்ளவேண்டும்.

www.uzairfalahi.com

**இஃதிகாஃப் மேற்கொள்ளும் நிலையில் விரும்பத்தகாதவை**

1 **தேவையற்ற செயல்கள், பேச்சுக்களில் ஈடுபடுதல்**

2 **ஆழ்ந்த சிந்தனை மற்றும் தியானத்தில் இல்லாத நிலையில் அமைதியாக இருத்தல்**

**இஃதிகாஃப் செய்பவருக்கு அனுமதிக்கப்பட்ட விஷயங்கள்**

1 **தவிர்க்க முடியாத தேவைகள், உதாரணமாக, மல ஜலம் கழிப்பதற்காகச் செல்லுதல்**

2 **முடி வெட்டுதல், நகங்களை வெட்டுதல், குளித்தல், துணி துவைத்தல். ஆடைகளை மாற்றிக்கொள்ளுதல் மற்றும் நறுமணம் பூசிக்கொள்ளுதல்.**

3 **பள்ளிவாசலில் உணவு உட்கொள்ளுதல் மற்றும் தூங்குதல்**

**இஃதிகாஃப் துவங்கும் மற்றும் முடித்துக்கொள்ளும் முறை**

இஃதிகாஃப் அதன் நிலை மற்றம் வகையினைப் பொருத்து அதற்கான காலம் கீழ்வருமாறு கடைபிடிக்கப்படும்:

1 **ரமஜ்தான் மாதத்தின் கடைசி பத்து நாட்களுடைய இஃதிகாஃப்** நிறைவேற்று பவர் ரமஜ்தான் மாதம் பத்தொன்பதாம் நாள் சூரியன் மறைவதற்கு முன்பாகவே பள்ளிவாசலில் வந்துவிடவேண்டும், ரமஜ்தான் மாதத் தின் கடைசி நாள் சூரியன் அஸ்தமமானபின் இஃதிகாஃப் முடித்துக் கொண்டு பள்ளிவாசலிலிருந்து வெளியே சென்றுவிடவேண்டும்.

2 **ஒரு குறிப்பிட்ட காலத்திற்காக நேர்ச்சையின் அடிப்படையிலான இஃதிகாஃப்** நிறைவேற்றுபவர்கள் அந்தக் குறிப்பிட்ட நாட்களிலேயே இதனைத் துவங்கவேண்டும். எந்த நாளில் துவங்கவேண்டுமோ அதற்கு முந்தைய நாள் மங்ரிப் தொழுகைக்கான பாங்கு சொல்லப்பட்டதிலிருந்து அடுத்த நாள் காலை ஃபஜ்ரு தொழுகைக்கான பாங்கு சொல்லப்படு வதற்கு முன்பே பள்ளிவாசலில் பிரவேசித்துவிடவேண்டும். அவ் வாறே, எந்த நாளில் அதனை முடித்துக்கொள்ளவேண்டுமோ அன்று சூரியன் அஸ்தமமான பின் பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும்.

3 **நஃபிலான இஃதிகாஃப்** நிறைவேற்றுவதாக இருந்தால் எந்த நேரத்திலும் இஃதிகாஃப் செய்யும் இடத்திற்குச் செல்லலாம், எப்போது வேண் டுமானாலும் முடித்துக்கொண்டு திரும்பியும் விடலாம். உலமாப் பெருமக்கள் பகல் மற்றும் இரவு நேர இஃதிகாஃப் நிறைவேற்று வதில் வித்தியாசத்தைக் கடைபிடிக்கின்றனர். பகல் நேர இஃதிகாஃப் நிறைவேற்ற நிய்யத் செய்திருந்தால் ஃபஜ்ரு தொழுகைக்கு முன்பா கவே இஃதிகாஃப் செய்யும் இடத்திற்குச் சென்றுவிடவேண்டும், சூரியன் அஸ்தமமான பின் பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறே, இரவு நேர இஃதிகாஃப் நிறைவேற்ற நிய்யத் செய்திருந்தால் சூரியன் அஸ்தமமாவதற்கு முன்பாகவே இஃதிகாஃப் செய்யும் இடத்திற்குச் சென்று விடவேண்டும், பஜ்ரு தொழுகைக் குப்பின் பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும். இதே போன்று, எவரும், ஒரு மாதகாலம் முழுவதற்குமான இஃதிகாஃப் நிறைவேற்ற நிய்யத் செய்திருந்தால், அந்த மாதம் துவங்குவதற்கு

www.uzaifalahi.com

*முந்தைய இரவில் இஃதிகாஃப் செய்யும் இடத்திற்குச் சென்றுவிட வேண்டும் மற்றும் ஒரு மாதகாலம் முடிவடைந்தபின் சூரியன் அஸ்தம மான பின் பள்ளிவாசலிலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும்.*

## இஃதிகாஃபை முறித்துவிடும் செயல்கள்

1 **மார்க்கச் சட்டத்தின் அடிப்படையிலான காரணமின்றி பள்ளிவாசலிலிருந்து வெளியே செல்லுதல்**

2 **உடலுறவு கொள்ளுதல்** *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

وَلَا تُبَٰشِرُوهُنَّ وَأَنتُمْ عَٰكِفُونَ فِى ٱلْمَسَٰجِدِ ۗ تِلْكَ حُدُودُ ٱللَّهِ فَلَا تَقْرَبُوهَا ﴿١٨٧﴾ البقر 87 )

*பொருள்: ஆனால், மஸ்ஜிதுகளில் நீங்கள் இஃதிகாஃப் இருக்கும் நிலையில் மனைவியரோடு கூடாதீர்கள். இவை அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட வரம்புகளாகும், எனவே, அவற்றை நீங்கள் மீறா தீர்கள் (அல் பஃகரஹ்:187).*

3 **ஏதோ காரணத்தினால் போதை அல்லது உணர்வின்மை உண்டாதல்**

4 **பைத்தியம் பிடித்தல் அல்லது நீண்ட நேரம் உணர்விழந்துபோதல் அல்லது உணர்வின்மை உண்டாதல்.**

5 **மாதவிடாய் அல்லது பிள்ளைப்பேறுகால இரத்தப்போக்கு ஏற்படுதல்**

* * *

www.uzairfalahi.com